## 29.7 நிதி வசதியுள்ள பெரிய ஊராட்சிகளின் முழு நேர எழுத்தரை நியமித்தல்

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 122 நாள் : 06.07.1999

படிக்க :

1. ஊரக வளர்ச்சித் துறையின் நிலை எண். 962, நாள்–28.11.1990 இட்ட அரசாணை
2. ஊரக வளர்ச்சித் துறையின் நிலை எண். 230, நாள்–15.10.1996 இட்ட அரசாணை
3. ஊரக வளர்ச்சித் துறையின் நிலை எண். 245, நாள்–04.08.1997 இட்ட அரசாணை
4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் ந.க.எண்.93590/98/ஈ1, நாள்–19.11.1998 இட்ட கடிதம்.

**ஆணை**

ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது தொடர்பாக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு கிராம ஊராட்சிகளில் முழுநேர எழுத்தர்களை நியமனம் செய்வது குறித்து கீழ்க்கண்டவாறு பரிந்துரைத்தது.

**பகுதி I பொதுப் பரிந்துரைகள்**

**கிராம ஊராட்சிகள்**

“2. கிராம ஊராட்சிகளில் கூடுதலாக ஏற்பட்டுள்ள பொறுப்புகளையும் கடமைகளையும் கருத்தில் கொண்டு ஊராட்சிகளின் வருமானம் மற்றும் மக்கள் தொகை அடிப்படையில் பெரிய மற்றும் இதர ஊராட்சிகளை வகைப்படுத்தவும், முதல் கட்டமாக வசதி உள்ள பெரிய ஊராட்சிகள் அவசியமெனக் கருதினால் அரசு நிர்ணயித்துள்ள தகுதிக்கேற்ப பகுதி நேர எழுத்தர் / மக்கள் நலப்பணியாளரை முழுநேர பணியாளராக நியமிக்கவும், இருவருக்கும் கல்வித் தகுதி இருப்பின் பணிமூப்பு அடிப்படையில் நியமிக்கவும் தகுதியான நபர்கள் இல்லாத போது அரசாணைக்குட்பட்டு புதிய நபரை நியமித்து கொள்ளவும் குழு பரிந்துரைக்கிறது”.

2. உயர்நிலைக் குழு அறிக்கைகளிலுள்ள பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து முடிவு செய்யக்கூடிய அமைச்சரவை கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு முடிவெடுக்கப்பட்டது.

“கிராம ஊராட்சிகளில் கூடுதலாக ஏற்பட்டுள்ள பொறுப்புகளையும் கடமைகளையும் கருத்தில் கொண்டு ரூபாய். 3 இலட்சத்திற்கும் கூடுதலாக சொந்த வருவாய் ஆதாரம் உள்ள வசதியான நிலை 1 ஊராட்சிகளுக்கு மட்டும் மொத்த வருவாய் ஆதாரத்தில் பத்து விழுக்காடுகள் சம்பள செலவினம் மிகாமல் தொகுப்பு ஊதிய அடிப்படையில் முழு நேர ஊராட்சி எழுத்தரை நியமித்து கொள்ள அனுமதி அளிக்கப்படும். இதற்குறிய தொகுப்பூதிய உச்ச வரம்பை அரசு நிர்ணயம் செய்யும்.”

3. கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துவதற்கான விதிகளை ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை நிலை எண்.62 நாள்–31.03.1999 நாளிட்ட அரசாணையில் ஏற்கனவே வெளியிட்டது. எனவே ரூபாய் மூன்று இலட்சத்திற்கும் கூடுதலாக சொந்த வருவாய் ஆதாரம் உள்ள நிலை 1 ஆக வகைப்படுத்தப்பட்ட வசதியான கிராம ஊராட்சிகள் மட்டும் சொந்த வருவாய் ஆதாரத்தில் பத்து விழுக்காட்டுக்கு சம்பள செலவின மிகாமல் தற்பொழுது இருக்கும் ஊராட்சி உதவியாளர் அல்லது பகுதி நேர எழுத்தரை முழுநேர கிராம ஊராட்சி எழுத்தராக தொகுப்பூதிய அடிப்படையில் நியமித்துக் கொள்ள அனுமதித்து அரசு ஆணையிடுகின்றது. தொகுப்பூதிய உச்ச வரம்பை நிர்ணயிக்க தேவையான கருத்துரு அனுப்புமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4.இந்த ஆணை நிதித் துறையின் அரசாணை எண். 48344/ஊ.வ./91–1, நாள்–05.07.1999ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்